**CMP .No. 699/2024** நாள் : 03.09.2024

தருமபுரி மாவட்டம், பங்குநத்தம், பண்டஅள்ளி கிராமம், கதவு எண் 2/20ல் வசித்து வரும் வேலு மகன் ஆகிய சுமார் 27 வயதுள்ள முரளி ஆகிய நான் பிரமாணத்தின் பேரில் கூறும் வாக்குமூலம்

புகார்தாரர் முனிராஜ் எனது உடன்பிறந்த அண்ணன் ஆவார். எனது அண்ணன் மங்கை ரெடிமேட்ஸ் என்ற பெயரில் சித்தவீரப்ப செட்டி தெரு, தருமபுரியில் கடை வைத்துள்ளார். கடந்த 23.10.2023ம் தேதியன்று பெங்களுருக்கு Hitesh கார்மென்ட்ஸ் நிறுவனத்திற்கு துணிகளை மொத்த கொள்முதல் செய்வதற்காக சென்றார். அந்த கடையில் ரூ. 1,33,150/—க்கு துணிகளை விலைக்கு வாங்கினார். பின்னர் துணிகளை எம்.எஸ்.எஸ் டிரான்ஸ்போர்ட் மூலமாக தருமபுரிக்கு அனுப்பி விடுவதாக Hitesh கார்மென்ட்ஸ் நிறுவனத்தில் எங்களுக்கு கூறியதால் எனது அண்ணன் பணத்தை செலுத்திவிட்டு வந்துவிட்டார். பின்னர் 29.10.2023ம் தேதியன்று மேற்படி பார்சல் டெலிவரி ஆகிவிட்டதாக எனது செல்போனுக்கு குறுஞ்செய்தி வந்தது. அதன் புக்கிங் நம்பர் 2691642 ஆகும். ஆனால் எங்கள் கடைக்கு பார்சல் எதுவும் டெலிவரி செய்யப்படவில்லை. அதனால் கடந்த 31.10.2023ம் தேதியன்று தருமபுரி எம்.எஸ்.எஸ் டிரான்ஸ்போர்ட்டுக்கு சென்று விசாரித்தோம். அங்கிருந்த மேலாளர் சி.சி.டி.வி பதிவுகளை ஆய்வு செய்து பார்த்து மேற்படி பண்டல் பெங்களூரில் இருந்து ஏற்றப்பட்டதை உறுதி செய்து கொண்டார். ஆனால் மேற்படி பார்சல் எங்கு சென்றது என்று தெரியவில்லை. இரண்டு நாட்களில் கண்டுபிடித்து தருகிறோம் என்று கிளை மேலாளர் உறுதிகூறி மேற்படி மேலாளர் பார்சல் டெலிவரி ஆகவில்லை என்று எழுதி கையொப்பமிட்டு டெலிவரி ரசீதில் எம்.எஸ்.எஸ் டிரான்ஸ்போர்ட் நிறுவனத்தின் சீல் வைத்து கொடுத்தார். பின்னர் இரண்டு நாட்கள் ஆகியும் பொருள் எங்களுக்கு வராததால் மீண்டும் எனது அண்ணன் எம்.எஸ்.எஸ் டிரான்ஸ்போர்ட்டிற்கு சென்று கேட்டபோது பார்சலை கொடுக்க முடியாது, திரும்ப கேட்க வந்தால் ஆள் வைத்து ஏதாவது செய்துவிடுவோம் என்று மிரட்டினார்கள். இதனால் எனது அண்ணன் தருமபுரி நகர காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார். அங்கு மனு ரசீது எண் கொடுத்து அனுப்பினார்கள். ஆனால் எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை. அதனால் பதிவு தபால் மூலம் தருமபுரி மாவட்ட காவல் கண்காணிப்பாளருக்கு புகார் அனுப்பினோம். அங்கும் எந்த நடவடிக்கையும் எடுக்காததால் எனது அண்ணன் இந்நீதிமன்றத்தில் புகாரை தாக்கல் செய்தார். மேற்படி எம்.எஸ்.எஸ் டிரான்ஸ்போர்ட் நிறுவனத்தின் மீது தகுந்த நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.